தமிழர் இயக்கம்
TAMIL MOVEMENT
BEWEGUNG DER TAMILEN
MOUVEMENT DES TAMOULS
MOVIMENTO DEI TAMIL

ROUT DE PENEY - 4, 1214 VERNIER

**07.01.2018**

# இலங்கை அரசபயங்கரவாதத்திற்கு எதிரான தமிழர்களின் விடுதலைப்போராட்டம் "பயங்கரவாதம்"அல்ல.

மதிப்பிற்குரிய சுவிஸ்வாழ் மக்களே!!! ஊடகங்களே!!!

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சுவிஸ்நாட்டில் வாழ்ந்துவரும் தமிழீழத் தமிழர்களாகிய நாங்கள் இந்நாட்டின் உயர்வான சட்டவாட்சியையும், அதன்பால் உள்ள நீதிபரிபாலனத்தையும் மதித்தும் சனநாயக விழுமியங்கள்களைப் பின்பற்றியும் இந்நாட்டு மக்களோடு மக்களாக வாழந்துவருகின்றோம்.எமது இரண்டாம் தலைமுறைப்பிள்ளைகள் சுவிஸ்நாட்டை தமது இரண்டாவது தாயகமாக கருதுவதோடு இந்நாட்டை உண்மையான நேசித்து வாழ்ந்துவருகின்றனர்

சிறிலங்கா அரசபயங்கரவாதத்தில் இருந்து எம் மண்ணையும் மக்களையும் காப்பதற்காக முன்னெடுத்த எமத விடுதலைப்போராட்டம் பயங்கரவாதமாக சித்தரிக்கப்பட்டு எமது விடுதலைக்காக போராடிய தமிழ்தேசிய இராணுவமான விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என முத்திரைகுத்தப்பட்டு, தமிழர்களின் விடுதலைக்கான செயற்பாடுகளை சுவிசில் மேற்கொண்ட உலகத்தமிழர் ஒருங்கிணைப்புகுழுவின் பணியாளர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு **Bellinzona** வில் அமைந்துள்ள சமஸ்டி குற்றவியல் நீதிமன்றினால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழினத்தின் விடுதலைக்காக போராடிய தமிழ்தேசிய இராணுவமான தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் தமிழர்களின் விடுதலைக்காக சுவிசில் பணிபுரிந்தவர்கள் மீதும் குற்றப்பத்திரத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள்:

1. **தமிழீழவிடுதலைப்புலிகள் ஓர் குற்றவியல் அமைப்பு.**
2. **தமிழீழவிடுதலைப்புலிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.**
3. **சுவிசில், தமிழீழ விடுதலைக்காக செயற்பட்டவர்கள் மக்களை அச்சுறுத்தி,வற்புறுத்தி நிதிசேகரித்தனர்.**
4. **சுவிசில் சேகரிக்கப்பட்ட நிதி இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு பாவிக்கப்பட்டது. இதனால் இங்கு நிதிச்சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் வன்முறைக்கு துணைபோயுள்ளதுடன் குற்றவியல் செயற்பாடுகளுக்கும் உடந்தையாகயுள்ளனர்.**
5. **குற்றவியல் அமைப்பு ஒன்றில் அங்கத்தவராக இருந்தமை.**

நாம் குற்றங்கள் செய்திருந்தால் அதை நியாயப்படுத்த முன்வரவில்லை. ஆனால் எமது தேசிய விடுதலைப்போராட்டத்தையும், அதன் முதுகெலும்பாக திகழந்த தமிழர்களின் தேசிய இராணுவமான தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழர்களின் விடுதலைக்காக உழைத்தவர்களையும் இலங்கை அரசின் பொய்பரப்புரைகளை நம்பி உண்மையை சீர்தூக்கிப்பார்ககாது பயங்கரவாதிகளாகவும், குற்றவாளிகளாகவும் வரையறை செய்வதை முற்றாகவே மறுக்கின்றோம்.

இலங்கைத்தீவில் ஒல்லாந்து, போரத்துக்கீச, பிரித்தானிய சாம்ராச்சியங்களின் காலனித்துவ ஆட்சிக்கு முன்னரே தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனி இராட்சியங்களில் தனித்துவமாக எமது நிலப்பரப்புக்களில் சுயமாகவே வாழ்ந்துவந்தோம். இறுதியாக இலங்கையை ஆண்ட பிரித்தானியரே தமது காலனித்துவ சிந்தனைகளுக்கும், நலன்களுக்கும் ஏற்ப தமது வல்லாதிக்கத்தால் தனித்தனியாக இருந்த இராட்சியங்களை அழித்து ஒன்றாக்கி, 1948 ல் தாம் இலங்கையைவிட்டு வெளியேறியபோது சிங்களப் பேரினவாதிகளிடம் இலங்கை அரசை ஒப்படைத்து சென்றனர்.

அன்றிலிருந்து மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய இலங்கை பௌத்த அரசபயங்கரவாதிகளால் தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற முத்திரை குத்தப்பட்டு இரண்டாம்தரக்குடிமக்களாக்கப்பட்டு, கல்வி வேலைவாய்பு பொருளாதாரம் போன்றவற்றில் ஓரங்கட்டப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டனர். தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களக்குடியேற்றங்களாக மாற்றப்பட்டன. இனவெறி அடக்குமுறைச் சட்டங்கள் சிங்களமொழியே அரசகரும்மொழிசட்டம் மற்றும் வடிவமைக்கப்பட்ட படுகொலைகள் என்பன கூட்டிணைக்கபட்ட தமிழின அழிப்பாக தமிழர்கள்மீது ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்டன. இலங்கை அரச பயங்கரவாதத்தினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளுக்கெதிராக தமிழினத்தலைவர்கள் முன்னெடுத்த சனநாயகப்போராட்டங்கள் சிங்கள இராணுவத்தால் ஆயுத முனைகளினால் அடக்கப்பட்டன. அதுமட்டுமல்லாது தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் இராணுவ அடக்குமுறையை புகுத்தி தமிழ்பெண்கனை கற்பழித்தும், இளைஞர்களை தார்போட்டு தீமுட்டி எரித்தும், கண்டதுண்டபாக வெட்டியும், கண்களைதோண்டியும் சிங்களம் தமிழர்களை பயமுறுத்தி அடக்கியாண்டது. இவ்வாறான இலங்கை அரசபயங்கரவாதச்செயல்களை பொறுக்கமுடியாமலும், பார்திருக்க முடியாமலுமே அரசபயங்கரவாதத்தில் இருந்து தமிழ்மக்ககளை தறகாத்துகொள்வதற்காகவே தமிழர்கள் வேறுவழியின்றி ஆயுதமேந்தவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதுவே தமிழீழீழ விடுதலைப்போராட்டம்

தமிழ் மக்களின் கோரிக்கையும், இலக்கும் சிங்கள் அரசினால் ஆக்கிரமிக்கப்பட்ட எமது மரபுவழிதாயகமான வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழதாயகத்தை மீட்பதேயாகும், நாம் சிங்களதேசத்தை ஆக்கிரமிக்க போராடவில்லை. இலங்கைத்தீவு காலனித்துவ ஆடசிகளுக்கு முறபட்ட காலத்தில் தனித்துவமான இறையாண்மைக்கு உட்பட்டிருந்த எம் இராட்சியங்களின் நியாயாதிக்க எல்லைக்குள் இருந்த எம் தேசங்களையே நாம் கோருகின்றோம். எமக்கு இலங்கை அரசபயங்கரவாத செயறபாடுகளினால் அழியும் எம் தேசத்தையும், மக்களையும்காப்பதற்கு தற்காப்புரிமை உண்டு.

www.tamil-movement.org
+41 77 956 25 61
+41 79 193 86 69
tamils.movement@gmail.com
Tamil Movement

தமிழ்மக்களின் முற்றுமுழுதான ஆதரவோடே தமிழீழவிடுதலைப்புலிகள் வளர்ந்தனர். மக்களின் ஆதரவு இல்லாமல் விடுதலைப்புலிகள் ஒருபோதும் ஒரு தேசிய இராணுவமாக வளர்ந்திருக்கமுடியாது. அதுமட்டுமின்றி தமிழீழத் தின் 70 வீத நிலப்பரப்பை சிங்கள அரச பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்ததுமட்டுமன்றி தமிழ்மக்களின பேராதரவோடு விடுதலைப்புலிகள் முப்படைகளையும் நிறுவி ஓர் அரசிற்கு தேவையான நீதி,நிதி அரசியல், நிர்வாகம், பொருண்மியம், புனர்வாழ்வு கல்வி போன்ற பல முக்கிய கட்டமைப்புக்களை கட்டியமைத்து எமது இனத்தின் இறையாண்மையை காத்து ஊழலற்ற நேர்மையான முற்போக்கான தமிழீழத்தனியரசை ஏற்படுத்தினார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சமாதானச் செயலகம்கூட இருந்து. தமிழீழ அரசினதும் சிறிலங்கா அரசினதும் ஒத்துழைப்போடும் நோர்வே அரசின் மூன்றாம்தரப்பு நடுநிலைவகிப்போடும் தான் கடந்த 2002 முதல் 2007 வரை பல்வேறு நாடுகளில் சமாதானப்பேச்சுக்கள் இடம்பெற்றன. இன்று பயங்கரவாதிகள், குற்றவாளிகள் என்று கருதப்படுவோர்களும் 2006 ம் ஆண்டு மாசிமாதம் யெனீவாவில் இடம்பெற்ற சமாதானப்பேச்சுவார்த்தைகளில் சமதகுதியுடையவர்களாக இராசமரியாதையைடன வரவேற்கப்பட்டு நடததப்பட்டனர். அப்படி எனில் அன்று பயங்கரவாதிகள் இல்லையா? சமாதானம் பேசிய அன்றைய சிங்கள அரசு பயங்கரவாதிகளுடன் பேசவில்லையா? இடம் கொடுத்த நாடும் மேலும் பல்வேறு நாடுகளும் பயங்கரவாதிகளுடன் பேச உடந்தையளிக்கவில்லையா? பயங்கரவாதிகள் எவ்வாறு நுழைவுச்சீட்டு (விசா) பெற்றார்கள்? எவ்வாறு வந்தார்கள்? எதற்காக வந்தார்கள்? என்ற நியாயமான கேள்விகளை தொடுத்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் அரசியல் தலைமை என்பதும் அவர்களே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்பதும் வெளிப்படையான உண்மையாகும். ஆகவே அதற்காக செயற்பட்ட பணியாளர்களையும், அங்கத்தவர்களையும் சுவிஸ்வாழ் மக்கள் பயங்கரவாதிகளாகவோ குற்றவாளிகளாகவோ நோக்கக்கூடாதென மன்றாட்டமாக வேண்டுகின்றோம்.

**நாங்கள் சமாதானத்தையும் அமைதியையுமே ஆதரித்தோம் போரை அல்ல**

சமாதான நடவடிக்கை காலத்தில் தான் புலம்பெயர் தமிழர்கள் எல்லோரும் அதீத நம்பிக்கைகொடுத்த காலம். மேலும் நாம் எம் தாயகத்திற்கு போய்வரக்கூடிய காலமாகவும் இருந்தகாலம். இவ் சந்தர்பத்தில் பல தசாப்பங்கள் நடந்த உக்கிரமான போரினால் சிதைந்துபோன எம் தேசத்தை கட்டியெழுப்பவும், போரின்வடுக்களால் நொந்துபோன எம் மக்களை ஆற்றுப்படுத்தவும் தமிழர்கள் என்ற வகையில் உதவிசெய்வதில் பெருமகிழ்சியும் மன நிறைவும் அடைந்தோம். அந்தநேரத்தில் பயங்கரவாதிகள் குற்றவாளிகள் யாரும் உதவக்கூடாது என்று யாரும் எமக்கு கூறவில்லை. மாறாக நீண்ட கொடிய போருக்குபின் தமிழர்களும், சிங்களவர்களும் பேச்சுவாரத்தை மேசையில் கைகுலுக்கிகொண்டிருந்த அதே காலகட்டத்தில் உலகம் போரைநோக்கி வேறுதுசையில் பயணித்துக்கொண்டிருந்தது. பேச்சுவாரத்தையில் பங்காளிகளாக ஈடுபட்டிருந்த சர்வதேச கூட்டுத்தலைமைகள் ஈராக் நாட்டின் மீதான படையெடுப்பு பற்றிய கருத்துக்களில் பிளவுபட்டிருந்தார்கள்.

இச் சமகால செயற்பாடு இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஈராக்கின் மீதான படையெடுப்பு எமது தாயகத்தின் ஒரு பகுதியான கிழக்கில் அமைந்துள்ள திருகோணமலை இயற்கை துறைமுகத்தின் சர்வதேச இராணுவநலன்களின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தியது. தமிழர்களாகிய நாங்களும் எங்கள் விடுதலைப்போராட்ட இயக்கமும் இந்து சமுத்திரம் ஒரு அமைதிவலயமாக இருப்பதை ஆதரித்தோம். வல்லாதிக்க சகதிகள் எமது ஆள்புல நீர்பரப்புக்குள்ளான எமது பிரதேசத்தை தமது இராணுவ நலன்களுக்கு உபயோகிப்பதை, அல்லது தமது தேவைக்குட்படுத்துவதை நாம் எதிரத்தோம். ஆனால் பிரித்தானியாவுக்கும்,ஐக்கிய அமெரிக்காவுக்கும் தமது நீண்டகால நண்பரான இலங்கை அரசு இவ்விடயத்தில் நெகிழ்ச்சியடையாது என்பது தெரியும். இரண்டு வல்லரசுகளும் தமது நலன்களுக்கு இலங்கைத்தீவை கொண்டுவருவதற்காக திட்டமிட்டே இலங்கையில் இடம்பெறும் சமாமான முனைப்புக்களை முறியடிக்க சில நடவடிக்கைகள் எடுத்தபோது நாம் அதிர்சியடைந்தோம்.

இத்தகைய சூட்சுமமான நடவடிக்கைகளினால் சமாதான நடவடிக்கைகளை முதலில் ஆதரித்த ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெயதமையால் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் முறிவடைந்து முடிவுக்கு வந்தது. இலங்கை கண்காணிப்புகுழுவின் தலைவரான சுவீடன் நாட்டைச் சேரந்த **மேஜர் உல்வ ஹென்றிக்சன்** கூறியது போல் ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப்புலிகள் மீதான தடை ஐக்கிய அமெரிக்காவினதும், பிரித்தானியாவினதும் பாரிய அழுத்தங்களினாலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சனநாயக வழிகளை தவிரத்தும் பிறேசல் நகரின் **கோப்பிக்கடைகளில் (கபேக்களில்)** எடுக்கப்பட்டது.

சமாதான நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய அமெரிக்காவும். பிரிந்தானியாவும் எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக உறுதியாக இருக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வேண்டி சவிட்சலாந்து நாட்டு புலம்பெயர் தமிழரும், ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் புலம்பெயர் தமிழரும் பிறேசல் நகரிலும் ஏனையை ஐரோப்பிய ஒன்றிய நகரங்களிலும் மாபெரும் போராட்டங்களை நடாத்தினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆயினும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. விடுதலைப்புலிகள் மீதான தடை போரை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்துக்கொண்டிருந்த சிங்கள பேரினவாத சக்திகளின் கரங்களை பலப்படுத்தியது. சர்வதேச சமூகத்தில் சமாதானநடவடிக்கைகளுக்கு ஆதரவு இல்லை என்றும், அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் கொள்கைக்கான வெற்றி என்றும் இத்தடையை ஆதாரமாக இவ்வரசியல்வாதிகளால் முன்வைக்க முடிந்தது.

தமிழர் இயக்கம்
TAMIL MOVEMENT
BEWEGUNG DER TAMILEN
MOUVEMENT DES TAMOULS
MOVIMENTO DEI TAMIL

ROUT DE PENEY - 4, 1214 VERNIER

இலங்கை சனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சே வெற்றிபெற இதுவே வழிவகுத்தது. 2007ல் ராஜபக்சே அமெரிக்காவுடன் Access and cross servicing எனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இந்த ஒப்பந்தத்தின் பலனாக அமெரிக்கா திருகோணமலை துறைமுகத்தை தனது இராணுவ தேவைக்கு உபயோகிப்பதற்கு வழிவகுக்கப்பட்டது. எமது மக்களுக்கு எதிரான போரும் அதே ஆண்டு ஆரம்பித்தது. இலங்கையின் கிழக்கு பகுதியில் அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட இராணுவம் எம் மக்களின்மேல் மிகவும் மோசமான மனிதாபிமானமற்ற தாக்குதல்களை ஆரம்பித்தது.

ஐ.நா செயலாளர் நாயகம் பாங்கீ மூனால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின்படி 2009 மே 18ம் திகதி முடிவுக்கு வந்த போரின் இறுதித் தருணங்களில் 70 000 தமிழ்மக்கள் சிங்கள இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். போர்நிறுத்த உடன்படிக்கையை முறித்ததும், 2007ம் ஆண்டு தமிழினத்திற்கெதிரான போரை உக்கிரமாக ஆரம்பித்ததும் சிங்களப்படைகளே தவிர தமிழர்தரப்பு இல்லை என்பதை நாம் ஆழமாகவும் மிகத்தெளிவாகவும் குறிப்பிட்டுகாட்டுகின்றோம்.

போரினால் சிதைந்துபோன கட்டுமானங்களை மீளக்கட்டியெழுப்பவும், பாதிக்கப்பட்டமக்களிற்கு உதவிகளை செய்யவுமே 2002-2007 காலப்பகுதியில் சுவிஸ்நாட்டில் புலம்பெயர்ந்து வசிக்கும் தமிழ்மக்கள் சகோதரத்துவ உணர்வுடன் மனிதாபிமானமாக பெரும்முயற்சிகளை ஒன்றுபட்டு எடுத்தார்கள். தமிழர்களின் உதவிகளுடன் கட்டியெழுப்பப்பட்ட அபிவிருத்திகளுக்கு ஆபத்துக்கள் வருவதை தமிழர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. போராடியவர்களும் இப்போரின்பால் உயிர்நீத்த எமது உறவுகளுமே இக்கொடியபோரினால் பாதிக்கப்பட்டவர்கள். இந்த கொடியபோரை தொடங்கியவர்கள் தமிழர்கள் அல்ல சிங்களப்பேரினவாதமே தமிழர்கள்மீது போரை திணித்தது.

தமிழீழவிடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையை காரணமாக வைத்து உலகத்தமிழர் ஒருங்கிணைப்புகுழுவின் அங்கத்தவர்கள் மேல் வழக்கு தொடர்வதானது உலகத்தமிழர்களின் சனநாயக் குரல்களை நசிக்கு சிங்கள அரசிற்கு முண்டுகொடுப்பதற்கு ஒப்பானதாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை பலமிழக்க செய்து மோசமான போருக்கான சூழலை உருவாக்கியதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை ஓர் முக்கிய உந்துசக்தியாக அமைந்தது. இத்தடை கடும் அழுத்தங்களினால் தான் ஐரோப்பிய ஒன்றியத்தால் கொண்டுவரப்பட்டது. இத்தடைகூட பிரச்சனையின் ஓர் அம்சமே. அடிப்படையில் இத்தடையானது விடுதலைக்காகவும் இழந்துபோன உரிமைகளுக்காகவும் நீதிவேண்டி நின்ற உலகத்தமிழனத்திற்கு அநீதியானது.

**சமாதான காலத்தில் அதன் முன்னெடுப்புகளுக்கு சுவிட்சலாந்து அரசு எடுத்த நடுநிலைமையை சுவிட்சிலாந்து மேலும் தொடரவேண்டும் என்பதே தமிழினத்தின் உள்ளக்கிடைக்கையாகும்.**

விடுதலைக்கான உரிமைப்போரில் போரியல் ரீதியில் தமிழினம் தோற்றுப்போனாலும் தமிழினம் போராடிய நோக்கம் நியாயமானதே, போர்சூட்சுமங்களினாலும் பல்வேறு சக்திகளின் நலன்சாரந்த கூட்டுச்சதியினாலும், அநீதிகளினாலும் திட்டமிட்டே வீழ்த்தப்பட்டோம். நாம் வன்முறைக்கு துணைபோனோம் என்றால், **உரிமைக்காக உழைத்த எமக்கு தண்டனையென்றால், தமிழினத்தை அழித்த மனிதகுலத்திற்கு எதிரான படுகொலைகளை சித்திரவதைகளை செய்த இலங்கை அரச பயங்கரவாதத்தை விசாரிப்பது யார்?** நீதி என்றால் பக்கசார்பு அற்றதாக இருக்கவேண்டும் நீதிக்கும் மனித உரிமைக்கும் உலகிற்கு முன்னுதாரணமாக திகழும் இந்த சுவிஸ்நாட்டில் தமிழினத்திற்கு நீதி இல்லையா?

**இறுதி போருக்கு முன்னர் சமதரப்பாய் இராணுவரீதியிலும் அரசியல் ரீதியிலும் இருந்தவர்கள் போரில் தோற்றுப்போனமையால் எப்படி குற்றவாளிகளாகமுடியும் ? சிறிலங்கா அரசபயங்கரவாதத்தால் தமிழினம் கொல்லப்பட்டமை, சித்திரவதைகள் அனுபவித்தமை பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகியமை, போன்ற பாரிய போர்க்குற்றங்களை சுவிஸ்நாட்டின் நீதியின் கண்களிற்கு துல்லியமாக தெரிந்திருந்தும் பாரிய போர்குற்றக்கறைபடிந்த இலங்கை படுகொலை அரசோடு மனிதநேயம்மிக்க சுவிஸ்நாடு கைகோரத்து அகதிகள் தொடர்பான கூட்டாண்மை மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளில் இணைந்துள்ளமை தமிழ்மக்களுக்கு அதிர்சியும் வேதனையாகவும் உள்ளது**

எனவே மனிஉரிமைகளையும் சுதந்திரகோட்பாடுகளையும் மதிக்கும் சுவிஸ்நாடும், மக்களும் சிறிலங்காவுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீள்பரிசீலனை செய்து அவ்வுடன்படிக்கைகளில் இருந்துவிலகி தமிழினத்திற்கு நீதிகிடைக்க ஆவணசெய்து சுவிஸ்நாட்டின் பெருமையை நிலைநாட்டுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.

www.tamil-movement.org
+41 77 956 25 61
+41 79 193 86 69
tamils.movement@gmail.com
Tamil Movement